KOICA
Korea International Cooperation Agency

unicef

# NEWS RELEASE

## இலங்கையின் வடகிழக்கில் பாடசாலைகளை விருத்தி செய்ய கொரியாவின் நன்கொடை

கொழும்பு, டிசம்பர் 23, 2011 – யுனிசெப் ஸ்தாபனம் கல்வியமைச்சின் துணையுடன், இலங்கையில் நெருக்கடியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த 23 பாடசாலைகளில் ஆசிரியர்களைப் பயிற்றுவித்து, பாடசாலை முகாமைத்துவ நடைமுறைகளை விருத்தி செய்யக்கூடிய திட்டமொன்றை அமுலாக்கவுள்ளது. இத்திட்டமானது கொரியாவின் நன்கொடை மூலம் சாத்தியப்படுகிறது.

கொரிய குடியரசின் சார்பில், கொய்க்கா எனப்படும் கொரிய சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையானது, இரண்டு மில்லியன் அமெரிக்க டொலர் அல்லது 227.8 மில்லியன் ரூபா செலவில், ஆசிரியர் பயிற்றுவிப்பு மற்றும் ஏனைய பாடசாலை நிர்வாக முறைமைகளை பகிர்ந்து கொள்ளும் முயற்சிகளுக்கு நிதியுதவி வழங்குகிறது.

இலங்கைக்கான கொய்க்காவின் பிரதிநிதி சோ சாங்-வூ கருத்து வெளியிடுகையில், ‘‘வடக்கு மற்றும் கிழக்கில் கல்வித்தரத்தை மேம்படுத்த வழிவகுக்கும் இத்திட்டமானது, ஸ்தாபன மற்றும் ஆற்றல் மேம்பாட்டுத் துறையில் யுனிசெப்பின் கல்வி நிபுணத்துவத்தையும் இணைத்துக் கொண்டு, பிராந்தியத்தில் அமுலில் இருக்கக்கூடிய கொய்க்கா பாடசாலை புனர்வாழ்வுத் திட்டங்களில் ஆக்கபூர்வமான சிறந்த பலனை ஏற்படுத்தும்’’ என்றார்.

இலங்கைக்கான யுனிசெப் பிரதிநிதி ரேஸா ஹுசைனி கருத்து வெளியிடுகையில்: ‘‘மிகவும் தயாள குணத்துடன் கொய்க்கா வழங்கும் இந்த நிதி உதவியை நாம் பெரிதும் வரவேற்கிறோம். கொய்க்காவுடனான பங்களிப்புடன் வழங்கப்படும் இன் நிதியுதவியின் மூலம் இலங்கையில் மிகவும் இடர்பாடுகளுடைய சில பிள்ளைகளுக்கு பாரபட்சமற்ற தரமான கல்வியைப் பெறக்கூடிய வசதிகளை அனுமதிக்கின்றது.’’

இந்த கொரிய நிதி அனுசரணையுடன் கூடிய கல்விப் பொதியானது, கற்பித்தல் முறைமைகள், பாடசாலை மையமாக கொண்ட நிர்வாகம், வகுப்பறை மதிப்பீட்டு தொழில்நுட்பங்கள், பாடசாலைகளில் மாணவர்கள் சேர்க்கப்படுதலையும், வரவையும் கூட்டுதல் போன்ற விடயங்கள் மூலம் கல்வித் தரத்தை மேம்படுத்த உதவும்.

கொய்க்காவின் அனுசரணையுடன் யுனிசெப் அமுல்படுத்தும் இந்தத் திட்டமானது ஆசிரிய பயிற்சி சார்ந்த சிறந்த முறைகளை மாத்திரமல்லாமல், பாடசாலை நிர்வாகத்தில் உள்ளூர் சமூகங்களையும் இணைத்துக் கொள்ளக்கூடிய புதிய முறைகளை உருவாக்க வழிவகுக்கும். அத்துடன் பாடசாலை அதிபர்கள் கொரியாவிற்கு விஜயம் செய்து, அங்குள்ள கற்பித்தல் முறைகள் மற்றும் பாடசாலை நிர்வாக நடைமுறைகளை அறிந்து கொள்ளவும் வழிவகுக்கும்.

ஒவ்வொரு பாடசாலைக்கும் விளையாட்டு மைதான உபகரணங்கள், விளையாட்டு மற்றும் உடற்கல்விக்குரிய பொழுதுபோக்குக் கருவிகள் போன்றவை வழங்கப்படும். மேலும் கற்றல் மற்றும் கற்பித்தல் உபகரணங்களும் கையளிக்கப்படவுள்ளன.

இந்த பாரிய கல்வி முதலீட்டுப் பொதி அமுலாவதை உறுதி செய்யும் விதத்தில், திரு.சோவும், திரு.ஹுசைனியும் டிசம்பர் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை புரிந்துணர்வு உடன்படிக்கையில் கூட்டாக கைச்சாத்திட்டார்கள்.

இப்பாடசாலைகளில் கற்றலை விருத்தி செய்வதன் மூலம் சுமார் 17,700 பிள்ளைகள் நன்மை பெறுவார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள கிளிநொச்சி, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் இத்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்ட சகல பாடசாலைகளையும் கொய்க்கா ஸ்தாபனம் புதிதாக நிர்மாணிக்கவுள்ளது.

புதிய பாடசாலைகளை நிர்வகிக்கும் முயற்சிகளில் உள்ளுர் சமூகங்களின் பங்களிப்பைப் பெற்று, அதனுடாக அவற்றை சிறப்பாக நிர்வகிக்கபபடும் சொத்துக்களாகவும், சமூகங்களை மீளக் கட்டியெழுப்பதற்குரிய வினைபொருளாக மாற்றுவதும் திட்டத்தின் நோக்கமாகும்.

***முடிவு***

*மேலதிக தகவல்களுக்கு: UNICEF Sri Lanka Communication Chief, Mervyn Fletcher on 011 2768555 x 207, mfletcher@unicef.org*

*அல்லது KOICA Sri Lanka Office project coordinator Ms. LEE hae-in on 011 2335551/1168, **leehi@koica.go.kr***